www.padippakam.com

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO
BRANCH OF FRANCE

# சபாரத்தினம் கொலைக்கு பிரபாகரன் செலவழித்தது மூன்று கோடி ரூபாய்!

குங்குமம், 30.5.86.

நார்வே டி.வி.யில் மூன்று மாதங்களுக்கு முன்பு தமிழீழப் போராட்டம் பற்றி ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்பினார்கள். அந்த நிகழ்ச்சியின் முடிவில், போராளிகளின் ஓர் அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பு (LTTE) மற்ற போராளி இயக்கங்களை அழித்துத் தன்னை முதன்மைப்படுத்திக் கொள்ளவும் திட்டமிட்டுள்ளது என்று சொன்னார்கள்.

குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் போன்றோரின் தலைமைக்குப் பிறகு 'டெலோ' இயக்கத்தை நடத்திவந்த சிறீ சபாரத்தினத்தை பிரபாகரன் கோஷ்டி கொன்றதன் மூலம் அதை நிரூபித்திருக்கிறார்கள்.

★ LTTE எனப்படும் விடுதலைப்புலிகள் அமைப்பு 'டெலோ' இயக்கத்தவரை அழிக்க பயன்படுத்தியுள்ள ஏவுகணைகள், துப்பாக்கிக் குண்டுகள் முதலியன மூன்று கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும்.

நயவஞ்சகமாக, டெலோ இயக்கத்தினர் உணவருந்திக் கொண்டிருந்த வேளையில், ஆயுதமில்லாது சாதாரண பயிற்சியில் இருந்தவேளைகளில் நண்பர்கள் போலச் சென்று திடீரென்று தாக்கி, அவர்களைக் கைது செய்து, ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருக்கிறார்கள்.

★ சிறீ சபாரத்தினத்தை சரண் அடையச் செய்யவேண்டும் என்பதற்காக கல்லியன்காடு 'டெலோ' முகாமில் ஏப்ரல் 29-ஆம் தேதி காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்:

ஆனால், கோண்டாவில், கோக்குரலை என்ற இடத்தில் மே 6-ஆம் தேதி, சிறீசபாரத்தினம் இருந்த வீட்டை காலை முதல் தாக்கியிருக்கிறார்கள். அந்த வீடும் அந்த வட்டாரமும் முற்றிலும் அழியும் நிலையைத் தடுத்திட பிற்பகல் 3-15 மணிக்கு, "மக்களுக்காகப் பாடுபட்ட நான் மக்களுக்காகவே மடிகிறேன்" என்று வெறுங்கையோடு வந்த சிறீ சபாரத்தினத்தை நெற்றியிலும் காலிலும் மார்பிலும் 28 தோட்டாக்களைச் செலுத்தி கொன்றிருக்கிறார்கள்.

★ விடுதலைப்புலிகள், டெலோவை அழிக்க ஏப்ரல் 29-ஆம் தேதி தாக்குதலைத் தொடங்கியபோது, முன்பு போர் நிறுத்த உடன்பாடு குழுவில் அங்கம் வகுத்த பேராசிரியர் சிவத்தம்பி, சமாதானப் பேச்சுக்குச் சென்றார். அவரிடம் "எங்கள் ராணுவ நடவடிக்கை முடிந்த பிறகு தான் பேச்சு" என்று சொல்லிவிட்டார்கள்.

சிறீ சபாரத்தினத்தின் இருப்பிடத்தைத் தெரிந்துகொள்ள கல்முனையைச் சேர்ந்த தாஸ் என்பவரையும் சவலக்கடையைச் சேர்ந்த குமார் என்ற 'டெலோ' போராளியையும் உயிரோடு எரித்தார்கள்.

இப்படிப் பிடிபட்ட டெலோ போராளிகளை விடுதலைப்புலிகள் செய்த சித்திரவதைகள் தமிழ் ஈழ மக்களிடம் வேகமான வெறுப்பு உணர்ச்சியை உருவாக்கியுள்ளது.

★ டெலோ ஆதரவாளர்கள் வீடுகள் எல்லாம் தொடர்ந்து தாக்குதலுக்கும், ராணுவசோதனை என்ற பெயரில் ஆயுதங்களைத் தேடுவதாகக் கூறிக்கொண்டு பொருட்களை எடுத்துச் செல்வதும் அந்த வட்டார மக்களிடம் கோபத்தை உருவாக்கி உள்ளது.



அச்சத்தாலும், மிரட்டலாலும் அந்த மக்கள் இன்று அடங்கிக் கிடக்கிறார்கள்.

★ டெலோ இயக்கத்தினர் சிங்கள ராணுவத்தை எதிர்க்க ஒரு விமானத்தைத் தயாரித்து வைத்திருந்தனர். அதையும் வெடி வைத்துத் தகர்த்து விட்டனர் எல். டி.டி.இ. போராளிகள். அதை எடுத்துச் சென்று அவர்களாவது பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், 'டெலோ' செய்தது என்ற பெயர் வெளியே தெரிந்துவிடுமே என்ற வெறித்தனம்.

★ தங்களிடம் சரண் அடைந்த டெலோ போராளிகளில் தேர்ந்த பயிற்சி பெற்றவர்களைத் தீர்த்துக் கட்டி வருகிறார்கள் விடுதலைப்புலிகள் - இவர்களால் தங்களுக்கு ஆபத்து விளையும் என்று.

★ 'ப்ரூஸ்' என்ற டெலோ போராளிதான். சிறீசபாரத்தினத்தின் கட்டளைப்படி, 'தி வீக்' பத்திரிகை நிருபர் 'பகவான்தாஸை' தமிழ் ஈழப்பகுதிகளுக்கு அழைத்துச் சென்று பாதுகாப்பாக திருப்பி அழைத்து வந்தவர்.

ஆறு மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் அவரை சுட்டதில் அவரது கை எலும்புகள் முறிந்து விட்டன. அப்போது சென்னைக்குத் திரும்பிய ப்ரூஸை, தன்னுயிரைப் பாதுகாத்து அழைத்து வந்ததற்காக பகவான்தாஸ் டாக்டர் மோகன்தாஸிடம் அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்கவைத்தார்.

ஏ. ஓ. முறையில் ப்ரூஸ் கை எலும்புகளை இணைக்க தகடுகள் பொருத்தப்பட்டன. இப்பொழுது ஈழத்தில், விடுதலைப்புலிகள் டெலோ முகாமைத் தாக்கியபோது ப்ரூஸ் தப்பி தமிழ்நாட்டுக்கு வந்து விட்டார். அப்படி அவர் தப்பி வரும் பொழுது அவர் கையில் பொருத்தப்பட்ட தகடுகள் பிய்த்துக் கொண்டு வெளியே வந்துவிட்டன. கை கட்டுடன் அவர் இருக்கிறார்.

'ப்ரூஸ்' அங்கேதான் இருக்கிறார் என்று எண்ணி அவருக்குப் பிணையாக ப்ரூஸின் தந்தையை விடுதலைப்புலிகள் பிடித்து வைத்திருந்தனர். ப்ரூஸ் கிடைக்காததனால் அவர் தந்தையை மே 10-ந் தேதி சுட்டுக் கொன்று விட்டார்கள்.

ஈழப் போராட்டத்தில், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை அழித்து. 'தானே எல்லாம்' என்ற நிலையை ஆக்கிக்கொள்ள விடுதலைப்புலிகள் எடுத்த இந்த தாக்குதல் நடவடிக்கையை நியாயப்படுத்த, டெலோ மீது அவதூறுகளையும் பழிகளையும் சுமத்தி வெளியீடுகளை வெளியிட்டு வருகின்றனர் விடுதலைப்புலிகள்.

—தமிழாளி





20 JUIN 86

படிப்பகம்